# சைவ மரபில் ஐயப்பன்

குருவடி பணிந்து
இ. லம்போதரன்

சைவம் சிவ சம்பந்தமானது. சைவத்தின் கடவுள் சிவன். சிவனுடைய அருவத் திருமேனிகள் நான்கு. அவை சிவம், சக்தி, நாதம், பிந்து என்பனவாம். சிவனுடைய அருவுருவத் திருமேனி சிவலிங்கம். இதை சதாசிவ மூர்த்தம் எனவும் சொல்வர். சிவனுடைய உருவத் திருமேனிகள் நான்கு. பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன். இந்த பிரம்மாவும் விக்ஷ்ணுவும் அடி முடி தேடிய பிரம்மா விஷ்ணுக்கள் அல்லர். இவர்கள் சம்பு பட்சமான சிவவிஷ்ணுவும், சிவபிரம்மாவும் ஆவர். அடி முடி தேடிய பிரம்மாவும் விஷ்ணுவும் பிரம்ம பதமும் விஷ்ணு பதமும் பெற்று உயர்ந்த ஆன்மாக்கள் ஆவர். இவர்களை அணுபட்ச பிரம்மா, அணுபட்ச விஷ்ணு என்றும் கூறுவர்.

நிற்க, உருவத் திருமேனியில் ஒன்றான மகேசுவரனுடைய மூர்த்தங்கள் இருபத்தைந்து. நடராசர், தட்சிணாமூர்த்தி எனபன அவற்றுள் நாம் அறிந்த சிலவாகும். இந்த இருபத்தைந்து மூர்த்தங்களில் ஒன்று ஹரியர்த்தர். இதை சங்கரநாராயணர் என்றும் **ஹரிஹரன்** என்றும் கூறுவர். இது சிவனை வலப்புறத்திலும் விஷ்ணுவை இடப்புறத்திலும் கொண்ட திருவுருவம் ஆகும். "**அரியலால் தேவி இல்லை"** என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். இந்த மூர்த்தத்தின் உடைய புத்திரனாக ஹரிஹர புத்திரன் ஐயப்பன் விளங்குகின்றார்.

சிவன் தடை நீக்கத்துக்காகவும், ஞானத்தை அளிப்பதற்குமாக எடுத்த திருமேனி கணபதி. சைவ மரபில் முன்னர் இல்லாதிருந்த கணபதி வழிபாடு பெரியபுராணத்தின் சிறுத்தொண்ட நாயனாரான பரஞ்சோதியார் படைத்தளபதியாக இருந்து சாளுக்கியர்களின் வாதாபி நகரை வெற்றிகொண்ட போது அங்கிருந்து கொண்டு வந்து புகுந்தது என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். ஆயினும் சிறுத்தொண்டர் வாழ்ந்த 7ம் நூற்றாண்டுக்கு முன்னரான பிள்ளையார் சிலைகள் இன்று தமிழ்நாட்டில் 5ம் நூற்றாண்டுக்குரியதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. சிறுத்தொண்டரின் சமகாலத்தவரும், அவரைக்கண்டு அளவளாவி மகிழ்ந்தவரும், சைவ சமய குரவரகள் நால்வரில் முதலாவதாக வைக்கப்படுபவருமாகிய திருஞானசம்பந்தர் தமது காலத்தில் புதிதாக வந்த கணபதி வழிபாட்டை எந்தவிதமான பேதமும் இன்றி ஏற்று தமது தேவாரத்திலும் **"பிடியதன் உருவுமை கொளமிகு கரியது வடிகொடு தனதடி வழிபடு மவரிடர் கடிகண பதி"** என்று பாடிப்போந்துள்ளார். ஓம் என்ற

பிரணவத்தின் வடிவான பெண்யானையின் வடிவை உமை எடுக்க, அதன் மிகுந்த விரிவாகிய பஞ்சாட்சர வடிவாகிய சிவன் ஆண்யானை வடிவு எடுத்து அவர்கள் இருவரின் சேர்க்கையால் நமது இடர்களைக் களைவதற்காகத் தோன்றியவர் கணபதி என்று பொருள் வரும். சிவமகாபுராணம், தேவி பாகவதம் உட்பட வேறு புராணங்களில் கணபதியின் தோற்றத்தைப்பற்றி பல விதமான கதைகள் இருந்தாலும் அவருடைய தோற்றத்தை சிறப்பாகவும், தத்துவ விளக்கத்துடனும், தெளிவாகவும், எளிதாகவும் விளக்குவது கந்தபுராணத்தில் உள்ள இக் கதை. .

இவ்வாறாக சிவ மூர்த்தமான விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திர்ர் ஆகிய நால்வரும் சிவபுத்திரர்களாகையால் சிவத்தோடு பேதமற்ற அபேத மூர்த்திகளாகச் சைவத்தில் கொண்டாடப்படுகின்றார்கள். அதேபோல சிவன் மோகினி வடிவம் கொண்ட திருமாலைச் சேர்ந்தபோது தோன்றியவர் ஐயனார் என்று தமிழில் உள்ள சைவத்தின் முப்பெரும் புராணங்களில் ஒன்றான கந்தபுராணம் கூறும். புராணங்களையும் சமயக்கதைகளையும் பழித்துரைக்கும் சிலர் சிவனும் திருமாலும் ஆகிய இரண்டு ஆண்கள் ஓரினச்சேர்க்கையாகச் சேர்ந்ததில் தோன்றியவரே ஐயப்பன் என்று கூறி ஏளனம் செய்கின்றனர். முதலாவதாக சைவம் பாலியலுக்கு நிறைவான ஆன்மீக முக்கியத்துவமும், விளக்கமும் தருகின்ற சமயம். பாலியலைப் பாவம் என்றும், சாத்தானின் வேலை என்றும் சொல்லிக்கொண்டே குடும்பம் நடத்தும் முரண்பாடு சைவத்துக்கு இல்லை. இரண்டாவதாக சைவம் பிறழ்பால் சேர்க்கையாளர்களை இக்காலத்தில் மட்டுமல்ல எக்காலத்திலுமே இழிவு படுத்திய சமயமல்ல. சூனியக்காரர்கள் என்றும், சாத்தானின் பிடியில் உள்ளவர்கள் என்றும் இவர்களை உயிரோடு எரித்த சமயமல்ல எமது சைவம். சைவம் இவர்களைக் காலவரையறையின்றிச் சிறையில் அடைத்ததில்லை. மனித நேயமும், அடிப்படை மனித உரிமைப் பட்டயங்களும், மருத்துவமும், விஞ்ஞானமும் இப்போது ஒரு சில வருடங்களாக உணர்ந்து சொல்லிவருவதெல்லாம் சைவம் காலம் காலமாக உணர்ந்த உண்மைகளே என்பதை ஏளனம் செய்பவர்களும், விமர்சிப்பவர்களும் கவனிக்க.

இறையை நாதம் என்கின்ற சிவம் அல்லது அப்பன் என்ற ஆண் வடிவும் பிந்து என்கின்ற சக்தி அல்லது தாய் என்ற பெண்வடிவும் இணைந்த ஒருமித்த அம்மையப்பர் வடிவில் எப்பொழுதும், எங்கும் காணும் தரிசனம் சைவத்தின் முனைப்புண்மை. எம்மில் சிவமும் சத்தியும் செயற்படும் தளங்களுதான் நாதம், பிந்து தத்துவங்கள். இவை இரண்டும் இணையும் போது அடி வயிற்றின் கீழே உள்ள குண்டலினி என்கின்ற பாலியற் சக்தி மேலெழுந்து மூலாதாரம் முதலாக சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆக்ஞை ஊடான ஆறு ஆதாரச் சக்கரங்களினூடாகச் சிரசு வரை மேல் நோக்கிப் பாய்ந்து இறையனுபவமாகிய பரவச நிலையை, புதிய உணர்வை, பார்வையை,

தெளிவை, தரிசனங்களை, விளக்கங்களைத் தருகின்றது. நாதம், பிந்து இணைந்து குண்டலினி சக்தி கீழ் நோக்கிச் செல்லும் போது உலக வாழ்க்கையில் பாலியல் இன்பமாகப் பரிணமிக்கின்றது.

ஆண், பெண், அலி, பிறழ்பாற் சேர்க்கையாளர் என்று எம்மில் ஒவ்வொருவரிலும் ஏற்கெனவே இந்த நாதம் ஆண்மையாகவும், பிந்து பெண்மையாகவும் வெவ்வேறு விகிதத்தில் வெளிக்காட்டப்படுகின்றது. ஆணில் பெண்மையும் பெண்ணில் ஆண்மையும் கலந்துதான் காணப்படுகின்றது. இதையே சைவர்களாகிய நாம் ஆண் பாதி, பெண் பாதியான அர்த்த நாரீசுவர வடிவில் காண்கின்றோம். ஆண்களில் நாதம் கூடிய விகிதத்திலும் பிந்து குறைந்த விகிதத்திலும் தொழிற்படுகின்றது; பெண்களில் பிந்து கூடிய விகிதத்திலும் நாதம் குறைந்த விகிதத்திலும் தொழிற்படுகின்றது. அவ்வாறில்லாமல் மாறுபட்டுக் காணப்படும் நிலையில் அலிகளும், பிறழ் பாற் சேர்க்கையாளர்களும் வருகின்றார்கள். ஒவ்வொருவரும் தம்முள் உள்ள இந்த நாதம், பிந்து உந்துதல்களின் அகச்சமநிலையைப் பெறும் பொருட்டு புறத்தே பாலியல் நாட்டத்தை வெளிப்படுத்துகின்றார்கள். இது மிகச்சிறிய கண்ணுக்குத் தெரியாத பற்றீரியாக்கள் போன்ற நுண்ணுயிர்களில் இருந்து மனிதர் வரையுள்ள சிக்கலான உயிரினங்கள் வரை  இவ்வுலகிற்கும் இக்காலத்திற்கும் மட்டுமன்றி, அண்ட சராசரங்கள் முழுமைக்கும், எக்காலத்துக்கும் பொருந்துகின்ற சாசுவதமான சைவ உண்மையாகும்.

சிவனுக்கு நான்கு வகையான சக்திகள் இருக்கின்றார்கள் என காளிதாசரின் குமார சம்பவம்  கூறுகின்றது.

**ஏகைவ சக்தி;பரமேச்வரஸ்ய**
**ப்ரயோஜநார்த்தாய சதுர்விதாபூத்**
**போகே பவாநீ புருஷேஷு விஷ்ணு**
**க்ரோதே ச காளீ ஸமரே ச துர்கா**

இதை தமிழில் கந்தபுராணம் பின்வருமாறு சொல்கின்றது.

**இறுதிசெய் திடலே சீற்றம் இன்பமே யாண்மை என்னா**
**அறைதரு சக்தி நான்காம் அரன்தனக் கையை காளி**
**முறைதரு கவுரி இன்னோர் மும்மையும் பெற்றோர் ஏனைப்**
**பெறலருஞ் சத்தியான்இப் பெற்றியும் மறைகள் பேசும்.**

சிவன் தனது நான்கு சக்திகளில் ஒன்றான திருமாலுடன் சேர்ந்த போது தோன்றியவரே ஐயப்பர். இதைக் கந்தபுராணம் மகா சாத்தாப் படலத்திலே காணலாம்.

**நால் வகைப்பட்ட நண்ணிய சக்தியுள்**
**மாலும் ஆதலின் மற்றது காட்டுவான்**
**ஆல கண்டத்தன் அச்சுதன் அச்சுறும்**
**கோலம் எய்திக் குறுகினன் அவ்விடை**

**இந்த வண்ணம் இருக்க முராரியும்**
**அந்தி வண்ணத்து அமலனும் ஆகியே**
**முந்து கூடி முயங்கிய எல்லையில்**
**வந்தனன் எமை வாழ்விக்கும் ஐயனே**

**மைக்கருங்கடல் மேனியும் வானுலாஞ்**
**செக்கர்மேனியுஞ் செண்டுறுகையுமாய்**
**உக்கிரமத்துடன் ஓர் மகன் சேர்தலும்**
**முக்கண் எந்தை முயக்கினை நீங்கினான்**

**அத்தகும் திரு மைந்தற்கு அரிகர**
**புத்திரன் எனும் நாமம் புனைந்து, பின்**
**ஒத்த பான்மை உருத்திரர் தம்மொடும்**
**வைத்து மிக்க வரம்பல நல்கியே**

**புவனம் ஈந்து, புவனத்து இறைவனை**
**அவனை நல்கி, அமரரும் மாதவர்**
**எவரும் ஏத்திடும் ஏற்றமும் நல்கினான்**
**சிவனது இன்னருள் செப்புதற் பாலதோ**
**- கந்த புராணம், மகா சாத்தாப்படலம்**

**பையராவமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்**
**ஐயனே ஓலம்! விண்ணோர்க்கும் ஆதியே ஓலம்! செண்டார்**
**கையனே ஓலம்! எங்கள் கடவளே ஓலம்! ஓலம்!**
**மெய்யனே ஓலம்! தொல்சீர் வீரனே! ஓலம்! ஓலம்!**

**ஆரணச்சுருதியோர் சார் அடலுருத்திரன் என்று ஏத்தும்**
**காரணக்கடவுள் ஓலம்! கடல் நிறத்து எந்தாய் ஓலம்!**
**பூரணைக்கு இறைவா ஓலம்! புட்கலை கணவா ஓலம்!**
**வாரணத்து இறைமேல் கொண்டு வரும் பிரான் ஓலம்!**
**-கந்தபுராணம், மகாகாளர் வரு படலம்**

இவ்வாறு சிவனே தம்மோடு ஒத்த உருத்திர்ர்களோடு ஒருவராக ஐயனாரை வைத்து, அவருக்கு என்று தனிப்புவனமும் ஈந்து, எல்லாவற்றுக்கும்மேலாக அவரை அமரர்களும், பெருந்தவம் செய்யும் முனிவர்களும் ஏத்தி, வணங்கித் துதிக்கும் பதமும் வழங்கினான் என்று கந்தபுராணம் கூறுகின்றது.

எட்டுத்திக்குகளிலும் திசைக்குப் பத்தாக உள்ள புவனங்கள் அவற்றுக்கு அதிபதிகளாயுள்ள உருத்திரர்களின் பெயரால் வழங்கப்பெறுகின்றனவென்றும், அவ்வாறாக கிழக்குத்திசையில் உள்ள புவனங்களில் ஒன்று சாஸ்தா புவனம் என்றும் ஆகமங்கள் கூறும். இது பிரம்மலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் போன்றதாகும். இங்கு எண்ணிறந்த புண்ணியாத்மாக்கள் சாஸ்தா பதம் பெற்று உறைகின்றார்கள். இவர்களில் பத்து சாஸ்தாக்கள் பிரதானமானவர்கள். இவர்களில் தலைமையானவர் மகாசாஸ்தா. இவரையே மகாசாத்தா என்று கந்தபுராணம் பாடுகின்றது.

சைவ நூல்களான ஆகமங்களும், சைவசித்தாந்தப் பெரும்பொருள் கூறும் கந்தபுராணமும் ஏற்றித்துதிக்கும் சிவ, விஷ்ணு, சக்தி அம்சமான ஹரிஹர புத்திரனான ஐயனார் சாஸ்தா மூர்த்திகளுக்கெல்லாம தலைவரான மாகா சாஸ்தாவே ஆவார் இவரையே ஐயனார் என்று சைவர்கள் காலங்காலமாக வழிபட்டு வருகின்றார்கள்.

இந்த பத்து சாஸ்தாக்களில் ஒருவர் தர்ம சாஸ்தா. இவரே இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் சபரிமலையில் மணிகண்டன் என்னும் அரசகுமாரனாக அவதரித்தவர் என்பது சபரிமலைத் தலபுராண வரலாறு. இவர் வழிபாட்டுக்கென்று எழுந்த ஆலயமே சபரிமலை ஐயப்பன் ஆலயம்.

பெரியபுராணத்திலும் சேரமான் பெருமாள் திருக்கைலாயத்தில் சிவனுக்கு முன் அரங்கேற்றிய திருவுலாப்பாடல்களை இந்த மாசாத்தானார் என்னும் மகாசாஸ்தா திருப்பிடவூரில் வெளிப்படுத்தி அருளினார் என்று கூறப்பட்டுள்ளது. **சேரமான பெருமாள் நாயனார்** பாடிய இந்த உலாப்பாடலே தமிழில் உள்ள முதலாவது உலாப்பாடலாகும். ஆதலால் இது ஆதி உலா என்னும் பெயராலும் வழங்கப்படுகின்றது.

**சேரர் காவலர் விண்ணப்பஞ் செய்தவத் திருவுலாப் புறமன்று**
**சாரல் வெள்ளியால் கயிலையிற் கேட்டமா சாத்தனார் தரித்திந்தப்**
**பாரில் வேதியர் திருப்பிட வூர்தனில் வெளிப்படப் பகர்ந்தெங்கு**
**நாரவேலைசூ ழுலகினில் விளங்கிட நாட்டினார் நலத்தாலே**
**- பெரிய புராணம், வெள்ளானைச்சருக்கம்**

உலாப் பாடல் என்பது,

**பேதை (7 வயது வரை),**
**பெதும்பை ( 8 இல் இருந்து 11 வயது வரை),**
**மங்கை (12 இல் இருந்து 13 வயது வரை),**

**மடந்தை ( 14 வயதில் இருந்து 16 வயது வரை),**
**அரிவை ( 16 வயதில் இருந்து  25 வயது வரை),**
**தெரிவை ( 26 இல் இருந்து 31 வயது வரை),**
**பேரிளம்பெண் ( 32 இல் இருந்து  40 வயது வரை)**
உள்ள எட்டு பருவத்துப் பெண்களும் வீதியில் உலா வரும் அரசனையோ அரசகுமாரனையோ ஆசையோடு பார்த்து ஈர்க்கப்பட்டு வரும் ஒருதலைக் காதல் ஆகும். ஆங்கிலத்தில் இதனை CRUSH என்று சொல்வார்கள்.

பின்வரும் தனிப்பாடல் இப்பருவங்களில் வயதெல்லையைக் கூறுகின்றது.

**போதைவய தேழாம் பெதும்பைபதி னொன்று மங்கை**
**மாதே பதின்மூன்றா கும்மடந்தை - யோதுபதி**
**னாறரிவை யாமிருபத் தைந்துமுப்பத் தொன்தெரிவை**
**பேரிளம்பெண் ணாற்பதெனப் பேசு**

நிற்க, சைவ ஆகமங்களிலும் சுப்பிரபேத ஆகமத்திலும், பூர்வகாரணாகமத்திலும், அம்சுமத் பேத ஆகமத்திலும் ஐயனாரைப் பற்றியும் அவருடைய உருவ லட்சணங்களைப்பற்றியும் பேசப்படுகின்றது. இதேபோல் **சில்பரத்தினம்** என்னும் நூலும், **தீட்சேந்திரம்** என்னும் நூலும் ஐயனாரைப்பற்றிய தகவல்கள் உள்ள நூல்களாகும். ஆனால் பிற்காலத்தெழுந்த ஐயப்பன் உருவ அமைப்பு பற்றிய செய்திகளோ அவருக்குரிய வழிபடுமுறைகளோ, விரதங்களோ ஆகமங்களில் இல்லை. ஆகவேதான் சபரிமலை ஐயப்பன் ஆலயத்தின் ,மரபுப்படி நெய் நிறைத்தல், இருமுடி கட்டுதல், பதினெட்டுப்படி பூசை முதலானவை எல்லா இடங்களிலும் ஐயப்ப வழிபாட்டில் பின்பற்றப்படுகின்றன.

இன்றைய ஐயப்ப வழிபாடானது பாரம்பரியமான ஐயனார் வழிபாட்டுடனும், சிவ வழிபாடுடனும், விஷ்ணு வழிபாட்டுடனும், சக்தி வழிபாட்டுடனும் ஒத்திசைந்து எழுந்த புதியதோர் வழிபாட்டு மரபு எனலாம். பாரம்பரியமான மகாசாத்தா வழிபாடான ஐயனார் வழிபாட்டையும் ஆலயங்களையும் இடமாகக் கொண்டாலும் அவற்றை ஆக்கிரமித்து பிரதியீடு செய்யாதவரை, தர்மசாஸ்தாவான ஐயப்பன் வழிபாடு  ஆகமச் சைவ நெறிக்கும், கந்தபுராணம் போன்ற சைவத்தமிழ் இலக்கியங்களுக்கும் முரணில்லாத, அமைவான, இசைவான வழிபாடாக கொள்ளலாம்.

**ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்**
**சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி**
**மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம் பற்றி வாழ்மின்**
**சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சேர்மின்களே**
**- சம்பந்தர் தேவாரம்**